கீழே உள்ள கட்சித் தொண்டர்கள், கட்சி ஊழியர்கள் சகோதரக் கட்சிகளுடன் சேர்ந்து கிராமம் கிராமமாக, பட்டி தொட்டி, பட்டணம், பட்டிக்காடு, சந்து பொந்து சகலத்திலும் மக்களைத் திரட்டும்படியான வேலைகளிலே ஈடுபடவேண்டும். நீங்கள் செய்துள்ள காரியத்தை நல்லது என்று எடுத்துக்காட்ட வேண்டும். உங்கள் குறைகளை அவர்கள் விமர்சிக்கட்டும். மக்களோடு சேர்ந்து உரையாடுங்கள். சட்ட மன்றத்திலே வந்து சேர்ந்ததால் நாம் உப்பரிகையிலே உட்காருகிறோம் என்று அர்த்தம் அல்ல அதுமாதிரி தோளோடு தோள் சேர்ந்து நிற்கக் கூடிய மற்றக் கட்சிகளோடு சேர்ந்து நில்லுங்கள். உழைப்பாளி மக்களுடைய சங்கங்களோடு, ஸ்தாபனங்களோடு சேர்ந்து நில்லுங்கள். அப்படிச் சென்றால் உங்களுடைய ஜனநாயக அடிப் படை இன்னும் வலுப்படும். மக்களிடத்தில் உங்களுடைய அஸ்தி வாரம் பலப்படும். இதுதான் மேற்கு வங்கம் தியுபுரா, கேரளாவில் எங்களுக்குக் கிடைத்த அனுபவம். அந்த அனுபவத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த முறையிலே இடதுசாரி ஜனநாயக சக்திகள் வெற்றி கண்டு முன்னேற வேண்டும். இது 1971 அல்ல. அன்று இந்திரா காங்கிரஸ் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடி கிடைத்து ஜாம் ஜாம் என்று எந்தச் சர்க்காரையும் வேண்டுமானால் கலைத்துவிடலாம் என்பது 1980லே நடக்காது. விஷயம் வேறு விதமாகப் போய்முடியும் என்பதையும் நாம் இன்றைக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கே ஒரே இந்திய நாடு இருக்க வேண்டாமா? அதையும் ஆலோசிக்க வேண்டும். இந்த நிலைமையில் இந்த ஆளுநர் உரையில் கிடைத்த சந்தர்ப்பத்தில் என்னுடைய கட்சியின் தெளிவான கொள்கைகளைப் பற்றி என்னால் முடிந்த அளவிற்கு எடுத்து வைத்திருக்கிறேன். பாக்கி உள்ளவைகளை எங்கள் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் பின்னால் விளக்கமாக எங்கள் நிலையை எடுத்து வைப்பார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

2. தகவல் கோரல்.

(இ) பதவி விலகிய திரு. பெ. சௌந்தரபாண்டியனுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள இடம் குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சௌந்திரபாண்டியன ராஜிநாமா தங்களுக்கு வந்து சேர வில்லை என்கிறீர்கள். இன்றைக்கு அந்த இடம் வெற்றிடம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அது முறையாக வந்திருக்கிறதா? ஜி. ஓ. வந்திருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைக்கு திரு. சௌந்தர பாண்டியனிடமிருந்து ஒரு இடத்தை ஒதுக்குமாறு கடிதம் வந்திருக்கிறது. நானும் இடத்தை ஒதுக்கியாகிவிட்டது.

கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையில் இப்போது நான் பார்த்த தகவலின்படி, நான் ஏற்கனவே சொன்ன கருத்தை திருத்தி சொல்ல வேண்டிய

கடமையில் இருக்கிறேன். அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலகி விட்டதாக அரசாங்க ஜி. ஓ. என்னுடைய அலுவலகத்திற்கு நேற்று வந்திருக்கிறது. அவர் வேறு கட்சிக்குப்போனதாகவோ, கட்சியிலிருந்து விலகியதாகவோ கடிதம் வரவில்லை. அவர் அமைச்சர் பதவியில் இருந்து விலகிவிட்டேன் என்பது குறித்து அரசாங்க உத்தரவு என் கையில் வந்திருப்பதை ஒட்டி அவருக்கு முதல் வரிசையில் இருந்த இடத்தை மாற்றி வேறு இடத்தை ஒதுக்கியிருக்கிறேன் என்ற தகவலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முன்னாலே அவா கடிதம் அனுப்பியுள்ளதாகச் சொன்னதை திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: எந்த இடம்?

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எவ்வளவு ஆவலாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். வெற்றிடம் எங்கே இருக்கிறதோ அங்கே அவருக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அவர் எங்கே இருக்கிறார் எனபது அவர் அமர்ந்த பிறகு உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. செ. சிவசாமி; எந்த எண்ணில் அவருக்கு இடம் ஒதுக்கப் பட்டு இருக்கிறது?

திரு. க. சுப்பு : முன்னாள் அமைச்சருக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்குவது வழக்கம். அதனால் எங்கள் பக்கம் ஒதுக்கியிருக்கிறீர்களா அல்லது வேறு இடத்தில் ஒதுக்கியிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அந்தக் கருத்தை பேரவைத் தலைவருக்கு யோசனை என்கிற முறையில் சொல்லலாம். அதையே ஒரு கட்டாயமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. உங்களுடைய யோசனை எனக்குத் தெரியும். அவர் எங்கே உட்கார வேண்டும் என்பதைப் பற்றி கேட்டதால் இருக்கிற இடத்தில் இடம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னேன்.

திரு. துரை கலியமூர்த்தி : அவருக்கு எந்த இடம் ஒதுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து அந்த உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.